# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097184

1. District : மாவட்டம் விருதுநகர்

PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு விருதுநகர்

Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 08/2020 Date: நாள் 10.09.2020

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 7 of Prevention of

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: Corruption (Amendment)

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்

Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 31.08.2020 11.00 hrs முதல்

Time Period : நேர அளவு

Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 09.09.2020 14.45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம் 10.09.2020 09.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம். அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் 25 கி.மீ வடகிழக்கே

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P S — District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. சின்னமுத்து

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஆயிரம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கூலி

(g) Address : முகவரி கதவு எண். 897, ஐக்கேந் தெரு, செம்பட்டி. அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. சிவசங்கரன், டவுன் சர்வேயர், நகராட்சி அலுவலகம், அருப்புக்கோட்டை.
2) திரு. சூரி, உதவியாளர், சர்வேயர் பிரிவு, நகராட்சி அலுவலகம், அருப்புக்கோட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 10.09.2020ம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்த போது விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கதவு எண். 897, அடக்கந் தெரு, செம்பட்டி, அருப்புக்கோட்டை என்ற முகவரியை சேர்ந்த திரு. ஆயிரம் என்பவரின் மகன் திரு. சின்னமுத்து என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி மனு மீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரிகள் மீது எதிர்மறையான சொத்துக்கள் இருந்ததாகவும், வழக்குப் பதிவு செய்ய போதுமான முகாந்திரம் உள்ளதாகவும், லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென் சரக காவல் கண்காணிப்பாளர், அவர்களுக்கு வாய் மொழியாக தகவல் தெரிவித்து விட்டு இன்று (10.09.2020) காலை 10.30 மணிக்கு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. சின்னமுத்து 10.9.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BADRINATHAN,
Rank: நிலை INSP. OF POLICE, No. எண் VPAC, VNR.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.2/2020 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2020 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018ன்படி எதிரி.1 திரு.சிவசங்கரன், டவுண் சர்வேயர், நகராட்சி அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். எதிரி.2 திரு.சூரி, உதவியாளர், சர்வேயர் பிரிவு, நகராட்சி அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் ஆகியோர்கள்மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் ஆ.சின்னமுத்து (வயது 49), த/பெ.ஆயிரம், கதவு எண்.897, வடக்குத்தெரு, செம்பட்டி, அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 03.11.2011ஆம் தேதி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, பந்தல்குடி கிராமம், பூசாரிரெட்டியபட்டி தெரு, பழைய கதவு எண்.47, புதிய கதவு எண்.806 என்ற முகவரியில் வசிக்கும் திரு.சுப்பையா செட்டியார் மகன் திரு.முனியசாமி என்பவரிடமிருந்து, அவருக்கு சொந்தமான அருப்புக்கோட்டை கிராமத்திலுள்ள அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குள்ளான சுப்புராஜ் நகரில் உள்ள செம்மண் கலந்த மண்சுவர் கொண்ட ஓட்டுவீட்டும் உள்ள 9 வீடுகளை (வீடு கதவு எண்கள்.3B(2), 3B(2)H, 3B(2)A, 3B(2)B, 3B(2)C, 3B(2)D, 3B(2)E, 3B(2)F, 3B(2)G) எனது பெயருக்கு அருப்புக்கோட்டை சார் பதிவாளர் ஆவண எண்.7628/2011ன்படி பத்திரப்பதிவு செய்து பெற்றேன். அந்த 9 வீடுகள் உள்ள மனைக்கும் டவுண் சர்வே எண்கள்.205, 206, 207, 208, 209, 239, 240, 241, 242 ஆகும். அந்த 9 வீடுகள் உள்ள மனைக்கும் பட்டா மாற்றம் செய்வது சம்பந்தமாக விபரம் கேட்க கடந்த 20.08.2020ஆம் தேதியன்று சுமார் 12.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று விசாரித்து, நகராட்சி அலுவலக மாடியில் உள்ள சர்வே பிரிவிற்கு சென்று அங்கிருந்த டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் என்பவரை சந்தித்து விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் வீடு சம்பந்தமாக உள்ள ஆவணங்களை கொண்டுவரச்சொன்னார். ஆகையால் மறுநாள் (21.08.2020) காலை சுமார் 11.00 மணியளவில் மேற்படி வீடுகளுக்குரிய ஆவணங்களுடன் நகராட்சி அலுவலக சர்வே பிரிவிற்கு சென்று, டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்களை சந்தித்து ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். அவர் அந்த ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, அவரது அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.சூரி என்பவரிடம் கொடுத்து அலுவலக பதிவேடுகளை வைத்து சரிபார்க்கச்சொன்னார். அவரும் சரிபார்த்துவிட்டு டவுண் சர்வேயர்

திரு.சிவசங்கரன் அவர்களிடம் சரியாக உள்ளது என்று சொன்னார். ஆகையால் மேற்படி திரு.சிவசங்கரன் அவர்கள், என்னை நீங்கள் வீட்டிற்கு போங்கள் என்றும், நாங்கள் மேற்படி வீடுகளை நேரடியாக பார்வையிட வருவோம் என்றும் சொன்னார். அதன்பின்பு நான்கு நாட்களாகியும் அவர்கள் என்னுடைய வீட்டை பார்வையிட வராததால், கடந்த 25.08.2020ஆம் தேதியன்று சுமார் 11.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக சர்வே பிரிவிற்கு சென்று டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்களை சந்தித்து கேட்டபோது, அன்றே பிற்பகல் வந்துவிடுவதாக சொன்னார். ஆகையால் நான் நேராக மேற்படி வீடுகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அங்கு காத்துக்கொண்டிருந்தேன். சுமார் மதியம் 3.00 மணியளவில் டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்கள், அவரது பிரிவு உதவியாளர் திரு.சூரி என்பவருடன் வந்து என்னுடைய வீடுகளை பார்வையிட்டார். பின்னர் என்னிடம், நீங்கள் அருப்புக்கோட்டை தாலுகா அலுவலகத்திலிருக்கும் இ-சேவை மையத்திற்கு சென்று சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு சென்று இணைய தளத்தில் பதிவு செய்துவிட்டு, அந்த பதிவு செய்த ஆவணத்துடன் தன்னை வந்து பார்க்குமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். நான் அவர் சொன்னபடி பட்டா மாறுதல் சம்பந்தமாக மேற்படி மனைக்கான ஆவணங்களுடன் (எனது பெயரில் உள்ள ஆதார் கார்டு, கிரைய பத்திர நகல், அடங்கல் நகல், வில்லங்கச்சான்று, அரசுக்கு செலுத்திய ரூ.1000/-க்கான சலான்) கடந்த 28.08.2020ஆம் தேதியன்று மதியம் சுமார் 3.15 மணியளவில் அருப்புக்கோட்டை தாலுகா அலுவலகம் சென்று இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்தேன். அதன்பின்பு நான், டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் சொன்னதுபோல் இ-சேவை மையத்தில் பதிவு செய்த விண்ணப்ப நகல் மற்றும் ஆவணங்களுடன் கடந்த 31.08.2020ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள சர்வே பிரிவிற்கு சென்று அலுவலகத்திலிருந்த டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்களை சந்தித்து, எனது பட்டா மாறுதல் சம்பந்தமாக இ-சேவை மையத்தில் பதிவு செய்த விண்ணப்பம் மற்றும் அதுதொடர்பான ஆவணங்களை கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு, அலுவலகத்திலிருந்த சர்வே பிரிவு உதவியாளர் திரு.சூரியிடம் அவற்றை கொடுத்துவிட்டு, அவரிடம் மற்ற அனைத்து விபரங்களும் அதாவது பணம் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பது சம்பந்தமாக கூறியுள்ளேன் என்றும், அவரிடம் அவற்றை கேட்டுத்தெரிந்து கொண்டு அவர் சொல்லும் பணத்தை கொண்டுவந்து கொடுங்கள் என்றும், அவ்வாறு கொடுத்தால்தான் உங்களது பட்டா மாறுதல் சம்பந்தமான விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுப்போம் என்றும், நாங்கள் நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்தால்தான் உங்களுக்கு பட்டா மாறுதல் கிடைக்கும் என்றும் கூறினார். அப்போது பிரிவு உதவியாளர் திரு.சூரி அவர்களும் உடன் இருந்து கேட்டுக்கொண்டிருந்தார். பின்னர் மேற்படி பிரிவு உதவியாளர் திரு.சூரி அவர்கள், என்னை தனியாக அழைத்துச்சென்று டவுண் சர்வேயர்

திரு.சிவசங்கரன் சொல்லியுள்ளதாக ஒரு சர்வே எண்ணுக்கு தலா ரூ.3,000/- வீதம் ஒன்பது சர்வே எண்களுக்கு ரூ.27,000/- கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்றும், அந்த ரூபாய் ரூ.27,000/- கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்களது விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுப்போம் என்றும், டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் சொன்னதுபோலவே இவரும் என்னிடம் சொன்னார். அப்போது நான் அவரிடம், சார் நான் கூலிவேலைதான் செய்து பிழைப்பு நடத்திவருகிறேன் என்றும், அவ்வளவு பணம் என்னால் ரெடி பண்ண முடியாது என்றும், நான் டவுண் சர்வேயரை வேணா நேரா பார்த்து குறைச்சு கேட்கிறேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்க வேணா டவுண் சர்வேயர் சாரை நேரா பார்த்து கேளுங்க, என்று சொல்லி, அவரும் என்னுடன் வந்தார். ஆகையால் நான் டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்களை அன்றே (31.08.2020) மதியம் சுமார் 12.00 மணியளவில் நேரில் சென்று சந்தித்து, அவரிடம், திரு.சூரி சார் அவர்கள் நீங்கள் சொல்லியுள்ளதாக ஒரு சர்வே எண்ணுக்கு தலா ரூ.3,000/- வீதம் ஒன்பது சர்வே எண்களுக்கு ரூ.27,000/- கேட்பதாகவும், கூலிவேலை செய்துவருவதால் அவ்வளவு பணம் என்னால ரெடி பண்ண முடியாது என்று கூறி நீங்க பார்த்து செய்யுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியா என்று சொல்லிவிட்டு, உங்களுக்காக ஒவ்வொரு சர்வே நம்பருக்கும் தலா ரூ.1,000/- வீதம் ரூ.9,000/- குறைச்சிட்டு ரூ.18,000/- கொண்டுவந்து கொடுங்கள் என்றும், இதிலேயும் ஏதும் குறைச்சு கொண்டுவந்திராதீங்க என்றும் சொன்னார். அப்போது பிரிவு உதவியாளர் திரு.சூரியும் உடன் இருந்தார். நான் வேறுவழியில்லாமல் அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் அவ்வளவு பணம் ரெடிபண்ண முடியாம, திரும்ப அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரனையும், பிரிவு உதவியாளர் திரு.சூரியையும் சந்திச்சு குறைச்சு கேட்கலாம்னு முடிவு பண்ணி, நேற்று (09.09.2020) மதியம் சுமார் 2.45 மணியளவில் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சர்வே பிரிவிற்கு சென்று, டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் அவர்களை சந்தித்து, என்னுடைய பட்டா மாறுதல் விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர், அவரது பிரிவு உதவியாளர் திரு.சூரியையும் அழைத்து, அவரை உடன் வைத்துக்கொண்டு என்னிடம் நாங்க கேட்ட ரூ.18,000/-த்தை கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அப்போது நான் அவரிடம் அய்யா நானும் அங்குமிங்கும் அலைந்து பார்த்தேன், அவ்வளவு பணம் புரட்ட முடியலய்யா, அதனால அய்யா பார்த்து ஏதாவது செய்யுங்கய்யா என்று கேட்டேன். அதற்கு அவர் இது பட்டா மாறுதல் செய்வதற்காக அருப்புக்கோட்டை நகராட்சிக்கு வருபவர்கள் எல்லாரும் கொடுக்கிறதுதான் என்றும், வழக்கமான ஒன்றுதான் என்றும், நீங்க ஒண்ணும் புதுசா கொடுக்கலய்யா என்றும் சொல்லி, மொத்தமாக ரூ.6,000/-த்தை குறைத்துக்கொண்டு ரூ.12,000/-த்தை கட்டாயம் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்றும், அந்த ரூ.12,000/-த்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்களது பட்டா

மாறுதல் விண்ணப்பம்மீது நடவடிக்கை எடுப்போம் என்று கண்டிப்பாகவும், கறாராகவும் சொல்லிவிட்டார். அப்போது பிரிவு உதவியாளர் திரு.சூரி அவர்களும் உடனிருந்து டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் சொன்னதையே அவரும் வலியுறுத்திச் சொன்னார். பின்னர் இரண்டுபேரும் சொன்னதால், நானும் வேறுவழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் வீட்டிற்கு வந்து யோசனை செய்துபார்த்ததில் நியாயமாக செய்யவேண்டிய அரசு வேலைக்கு நாம் ஏன் லஞ்சம் தரணும் என்றும், எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால், இன்று 10.09.2020ஆம் தேதி காலை விருதுநகர் லஞ்சஒழிப்புத்துறை அலுவலகத்திற்குவந்து, எனது பெயரில் உள்ள ஒன்பது வீட்டு மனைகளுக்கு பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்வதற்கு என்னிடம் ரூ.12000/- லஞ்சப்பணம் கேட்ட அருப்புக்கோட்டை நகராட்சி டவுண் சர்வேயர் திரு.சிவசங்கரன் மற்றும் சர்வே பிரிவு உதவியாளர் திரு.சூரி ஆகியோர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.12,000/-த்தை கையில் வைத்துக்கொண்டு, தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இப்படிக்கு (sd), A.சின்னமுத்து 10.9.20. Sir, Received the complaint on 10.09.2020 at 9.00 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found bad. and found prima-facie for the mentioned allegation of the complaint, since the registration of regular case is warranted in the prima-facie. Hence, I registered a case in Virudhunagar Vigilance and Anti Corruption Cr.No.2/2020 u/s 7 of PC (Amendment) Act 2018 at 10.30 hrs. today on 10.09.2020 and took up for investigation. The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM Court/Spl. Judge for PC Act Cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers. (Sd) (R.Boominathan) 10.09.XX Insp. of Police, V&AC, VNR.

(R.BOOMINATHAN.)
INSP of POLICE,
V&AC, VNR.